بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 20/03/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரை**

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கருத்தாழம் மிக்க வழிகாட்டல்களின் ஒளியில் இம்மை மற்றும் மறுமையின் நன்மைகளை வேண்டுவது குறித்த அறிவுரை**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்று நான் பெருநாள் குத்பாவும் கொடுத்திருக்கிறேன். எனவே, இப்பொழுது நான் சுருக்கமாக குத்பா கொடுப்பேன். அதற்காக ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்திருக்கிறேன். நாம் இதன் பக்கம் எப்பொழுதும் கவனம் செலுத்த வேண்டும்.

அன்னார் கூறுகிறார்கள்: நம்பிக்கை கொண்டவருக்கு உலகத்துடன் எந்த அளவுக்குத் தொடர்புகள் பரந்துபட்டு இருக்குமோ அவை அவருடைய உயர்ப்படித்தரத்துக்குக் காரணமாக அமையும். ஏனெனில், அவருடைய முக்கியக் குறிக்கோள் மார்க்கமாக இருக்கும். அவர்களுடைய நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும் என்பதனால்தான், அவர்களுக்கு உலகத்துடன் இருக்கும் தொடர்புகளும் விரிவாகவும், நன்றாகவும் இருக்கும். அதாவது, உலகத்துடன் கொண்டிருக்கும் அந்தத் தொடர்புகளின் நோக்கமே மார்க்கமாக இருக்க வேண்டும். இது நம்பிக்கையாளரின் அடையாளமாகும்.

அவருடைய உலகம், செல்வம் மற்றும் மதிப்பு ஆகியவை மார்க்கத்திற்குத் தொண்டாற்றுபவையாக இருக்கும். எனவே, உலகம் குறிக்கோளாக இருக்கக் கூடாது; மாறாக, உலகத்தைப் பெறுவதில் மார்க்கம் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும் என்பதே அசல் விஷயமாகும். உலகை சம்பாதித்தாலும், நமது மார்க்கம் மேம்பட வேண்டும்; நாம் மார்க்கத்துக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பது

அதன் நோக்கமாக இருக்க வேண்டும். உலகையும் மார்க்கத்தின் மேப்பாட்டுக்காகவே சம்பாதிக்க வேண்டுமே அன்றி, தவறான வேலையை செய்து நமது இம்மையையும் மறுமையையும் சீர்கெடுத்துக் கொள்வதற்காக இருக்கக் கூடாது. அதற்கு மாறாக, நமது மறுமையை சீராக்கிக் கொள்வதற்காகவும், நமது மார்க்கத்தை சீர்தூக்கிக் கொள்வதற்காகவும் நாம் உலகை சம்பாதிக்க வேண்டும்.

மேலும், கூறினார்கள்: மார்க்கத்திற்குத் தொண்டு செய்வதாக இருக்கின்ற வகையில், உலகத்தைப் பெற வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒருவர் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதற்கு, பயணத்துக்காக சவாரியையும் பயணத்துக்குத் தேவையான பொருட்களையும் உடன் எடுத்துக் கொள்கிறார். ஆக, அவருடைய உண்மையான நோக்கம் சேருமிடத்தைச் சென்றடைவதாக இருக்கிறதே தவிர, சவாரியும் வழிக்குத் தேவையானதும் உண்மையான நோக்கமாக இருப்பதில்லை. நாம் உடன் எடுத்துக் கொள்ளும் இந்த அனைத்துப் பொருட்களும் பயணத்தில் எளிமையை ஏற்படுத்துவதற்காக இருக்கின்றன. நிம்மதியாகப் பயணம் கழிந்து விட வேண்டும்; நாம் சேருமிடத்தை சென்றடைந்து விட வேண்டும் என்பதே அதன் நோக்கமாக இருக்கிறது. அதுவன்றி, நாம் அவற்றால் பயணத்தில் இன்புற வேண்டும் என்பது நோக்கமாக இருப்பதில்லை.

அன்னார் கூறுகிறார்கள்: அவ்வாறே மனிதன் உலகைப் பெற வேண்டும். ஆனால், அதை மார்க்கத்திற்குத் தொண்டு செய்வதாகக் கருதி பெற வேண்டும். (அதற்காக) அல்லாஹ் இந்த துஆவைக் கற்றுக் கொடுத்துள்ளான்:

رَبَّنَا اٰتِنَا فِى الدُّنۡيَا حَسَنَةً وَّفِى الۡاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

பொருள்: அல்லாஹ்வே! எங்களுக்கு உலகத்தின் நன்மைகளையும் வழங்குவாயாக! மறுமையின் நன்மைகளையும் வழங்குவாயாக! அன்னார் கூறுகிறார்கள்: அல்லாஹ்

رَبَّنَا اٰتِنَا فِى الدُّنۡيَا حَسَنَةً وَّفِى الۡاٰخِرَةِ حَسَنَةً

என்ற போதனையை வழங்கியிருக்கிறானே, இதிலும் உலகத்தை முதன்மையாக வைத்துள்ளான். ஆனால், எந்த உலகத்தை? முதலில் உலகத்தை வைத்துள்ளான். ஆனால், ஏன்? எந்த உலகத்தை வைத்துள்ளான்? மறுமையில் நன்மைகளுக்குக் காரணமாக அமையக்கூடிய அந்த உலகின்நன்மைகளை வைத்துள்ளான்.

எந்த உலகத்தைப் பெற்று மறுமையிலும் பயன் கிடைக்குமோ அத்தகைய உலகம். மறுமையின் நன்மைகளுக்குக் காரணமாக அமையக்கூடிய அத்தகைய உலக விஷயங்கள் கிடைக்க வேண்டும். அதுவல்லாமல், நாம் மறுமையில் வெட்கத்தை எதிர்கொள்ள நேரிடுவதாக இருக்கக் கூடாது. முற்றிலும் உலகில் மூழ்கிவிடும்போது, வெட்கத்தை எதிர்கொள்ள நேரிடும்.

அன்னார் கூறுகிறார்கள்: நம்பிக்கை கொண்டவர் உலகைப் பெறுவதில் மறுமையின் நன்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது, இந்த துஆவிற்கான போதனையிலிருந்து தெளிவாகப் புரிந்து விடுகிறது. அத்துடன், ஒரு நம்பிக்கை கொண்ட முஸ்லிம் உலகைப் பெறுவதற்காக எந்த வழிமுறைகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டுமோ, உலகைப் பெறுவதற்கான அந்த அனைத்து மிகச் சிறந்த வழிமுறைகள் பற்றியும் உலகின் நன்மை என்ற சொல்லில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எதை மேற்கொள்வதனால், நன்மையும், சிறப்பும் மட்டுமே இருக்கின்றனவோ அத்தகைய அனைத்து வழிமுறைகள் மூலமாகவும் உலகைப் பெறுங்கள். (அதை விட்டுவிட்டு) பிற மனித குலத்திற்குத் துன்பம் ஏற்படுதவற்குக் காரணமாக அமைகின்ற வழியில் அல்ல. உங்கள் இனத்தவரில் எவருடைய குறைபாடுக்கும், வெட்கத்திற்கும் காரணமாக இருக்கின்ற வழியில் அல்ல. ஐயமின்றி, இத்தகைய உலகம் மறுமையின் நன்மைக்குக் காரணமாகத் திகழும்.

எப்படிப்பட்ட உலகை சம்பாதிக்க வேண்டுமென்றால், அதனால், உங்களுக்கு மட்டும் பலன் ஏற்படாமல், அதற்கும் மேற்பட்டு, மனித குலத்துக்கும் பலன் ஏற்பட வேண்டும். நீங்கள் வெட்கப்படுவதற்குக் காரணமாக அமைகின்ற, உங்களுடைய குடும்பம் மற்றும் உங்களுடைய நெருங்கிய உறவினர்கள் வெட்கப்படுவதற்குக் காரணமாக அமைகின்ற எந்தச் செயலும் உலகில் நிகழக் கூடாது. மாறாக, தூய்மையான, சுத்தமான வாழ்வு இருக்க வேண்டும். நன்மை மற்றும் இறையச்சத்தில் நடக்கக்கூடிய வாழ்வாக அது இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட வாழ்க்கை இருக்கும்போது, இப்படிப்பட்ட உலகத்தை சம்பாதிப்பதற்காக உங்களுடைய வாழ்வை நீங்கள் கழிக்கும்போது, அது இம்மை மற்றும் மறுமை ஆகிய இரண்டிலும் உங்களுக்கு அருள்களைத் தரும்.

பொதுவாக, தற்போது உலகம் தனது நோக்கங்களையும், பலன்களையும் பெறுவதில் மூழ்கியிருக்கிறது. சுய ஆதாயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட இந்தக் காலத்தில் சமுதாயங்களை நாம் பார்த்தோமேயானால், அவர்களுக்குத் தமது சமுதாயத்தைப் பற்றிய கவலை மட்டுமே உள்ளதே தவிர, மனிதத்தைப் பற்றி அல்ல. அதில் விழுந்து இந்த மக்கள் தமது அழிவிற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய நிலையில் நாம் அல்லாஹ்விடம் உலகம் மற்றும் மறுமைக்கான நன்மைகளைப் பெறுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய சூழ்நிலையில், நாம் இதன் பக்கம் மிக அதிகம் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. அப்போதுதான் நாம் நம்முடைய இம்மையையும், மறுமையையும் சீர்படுத்திக் கொள்ளவும் முடியும். எல்லா விதமான பேராபத்துகளில் இருந்து பாதுகாப்பாக இருக்கவும் முடியும்.

நான் கூறியது போன்று, உலகம் அழிவின் குழிக்குள் செல்கிறது. அல்லாஹ் நம்மை அதிலிருந்து பாதுகாத்து வைப்பானாக. அல்லாஹ் நமக்கு நம்முடைய அமல்களையும் சிறப்பாக்குவதற்கு நல்வாய்ப்பு கிடைக்கச் செய்வானாக. இப்பொழுது குத்பாவில் நான் கூறியது போன்று, இந்த ரீதியிலும் நமக்கு துஆக்கள் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைக்கட்டுமாக. அல்லாஹ் நமக்கு உண்மையில், இந்த நன்மைகளைப் பெறுவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! மிகச் சிறந்த துஆக்களையும் செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! அவற்றை ஏற்றும் கொள்வானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ
اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ
اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ
وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ ـ

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**